# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(குற்ற விசாரணை முறைச் சட்டம் பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

C 8093683

1. District / மாவட்டம் : விருதுநகர் PS / காவல்நிலையம் : ஊ.த.க.பிரிவு, விருதுநகர் Year / ஆண்டு : 2020 FIR No. / மு.த.அ. எண் : 07/2020 Date / நாள் : 18.12.2020
2. (i) Act / சட்டம் : Sections / பிரிவுகள் : 7 (a) Prevention of
   (ii) Act / சட்டம் : Sections / பிரிவுகள் : Corruption Amendment
   (iii) Act / சட்டம் : Sections / பிரிவுகள் : Act 2018
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :
3. (a) Occurrence of Offence Day / குற்ற நிகழ்வு நாள் : 12.12.2020 Date from / நாள் முதல் : 08.00 மணி Date to / நாள் வரை : 23.30 மணி
   Time Period / நேர அளவு : Time from / நேரம் முதல் : Time to / நேரம் வரை :
   (b) Information Received at PS. Date / காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் : Time / நேரம் :
   (c) General Diary Reference : Entry No(s) / பொது நாட்குறிப்பின் பதிவு விவரம் எண் : Time / நேரம் :
4. Type of Information : Written/ Oral : / தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக
5. Place of Occurrence (a) Direction and Distance from PS: / குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் : விருதுநகர் வி.வி.வி. வணிகர் கல்லூரி அருகில், மாறும் விருதுநகர் வட்டார போக்குவரத்து அலுவலக சோதனைச் சாவடி உள்ளேயும் விருதுநகர். கிழக்கு 7 கி.மீ வடக்கு
   Beat Number / முறைக் காவல் எண் : (b) Address / முகவரி :
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்
6. Complainant /Informant (a) Name / குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் : திரு. செந்தில்வேல் (b) Father's/ Husband's Name / தந்தை / கணவர் பெயர் : செல்வராஜ்
   (c) Date / Year of Birth : / நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : / நாட்டினம் (e) Passport No. : / வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : / வழங்கப்பட்ட நாள் Place of Issue : / வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : / தொழில் (g) Address / முகவரி : நிலை ஆய்வர்குழு அலுவலர் விருதுநகர்
7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) திருமதி. [illegible], மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1, வட்டார போக்குவரத்து அலுவலகம், விருதுநகர்.
   2) திரு. செல்வகுமார், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1, வட்டார போக்குவரத்து அலுவலகம், [illegible]
   3) திரு. அருண்பிரசாத், பாலவநத்தம் [illegible], விருதுநகர்
8. Reasons for delay in reporting by the complainant / Informant
   குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   வாதியால் தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

நான் (விமலா, காவல் ஆய்வாளர்) இன்று 13.12.2020ம் தேதி காலையில் விருதுநகர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலக பணியில் இருந்தபோது இணை ஆய்வுக்குழு அலுவலர் திரு. கெ. செந்தில்வேல் அவர்கள் அதிகாலை சுமார் 2.30 மணிக்கு நிலையத்தில் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன் விருதுநகர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் அறையில் வைத்து தயார் செய்த திடீர் இணை ஆய்வு அறிக்கை நாள். 12.12.2020 மற்றும் திருமதி. கலைச்செல்வி, மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I, விருதுநகர், திரு. சண்முக ஆனந்த், மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I, வட்டார போக்குவரத்து அலுவலகம், மதுரை வடக்கு, திரு. அருள்பிரகாஷ், பாலசந்திரா டி.வி.எஸ் ஏஜென்சி, விருதுநகர் மற்றும் ராஜா, S/o நடேசன் ஆகியோர்களின் வாக்குமூலத்தினை இணைத்து (தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the investigation / Refused investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 13/12/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 13/12/2020
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் S. VIMALA
Rank: நிலை Inspector of Police No.
VAC Virudhunagar

**விருதுநகர் ஊ.த.க.பிரிவின் குற்ற எண்.07/2020 பிரிவு 7 of Prevention of Corruption (Amendment) Act 2018-ன் தொடர்ச்சி:-** நடவடிக்கை எடுக்கவேண்டி கொடுத்தார். அந்த புகார் மனுவின் விபரம் பின்வருமாறு:- அனுப்புனர் செந்திவேல் (47/2020) தனி வட்டாட்சியர் (நி.எ.) ரயில்வே அகலப்பாதை இரட்டிப்பு அலகு-1, விருதுநகர் மற்றும் துணை ஆய்வுக்குழு அலுவலர். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர். பொருள் : விருதுநகர் மாவட்டம் - விருதுநகர் வி.வி.வி. பெண்கள் கல்லூரி அருகில், விருதுநகர் மற்றும் விருதுநகர் வட்டார போக்குவரத்து அலுவல கட்டிட வாளகத்திற்குள், விருதுநகர். - மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திடீர்இணை ஆய்வு - லஞ்ச பணம் கைப்பற்றியது - நடவடிக்கை எடுக்க வேண்டுவது - தொடர்பாக. நான் விருதுநகர், ரயில்வே அகலப்பாதை இரட்டிப்பு அலகு-1, தனி வட்டாட்சியராக (நி.எ.) கடந்த 09.01.2020ஆம் தேதி முதலும், அதில் மாவட்ட ஆட்சியர் அவர்களின் உத்தரவின்பேரில் கடந்த 01.12.2020ம் தேதி முதல் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலராகவும் இருந்து வருகிறேன். இன்று (12.12.2020) விருதுநகர்-மதுரை தேசிய நெடுஞ்சாலை-44ன் கிழக்கு பக்கம் விருதுநகர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணிபுரிந்துவரும் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I என்பவர், பொதுமக்களின் புதிய வாகனத்தை பதிவு செய்வது, வாகன தகுதிச்சான்று வழங்குவது, வாகன உரிமம் பெற ஆய்வு செய்வது போன்றவற்றிற்காக விருதுநகர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தை அணுகும்போது, அவற்றை செய்துதர, பொதுமக்களிடமிருந்து லஞ்சமாக பணம் வசூல் செய்வதாகவும், அந்த லஞ்ச பணத்தை ஓட்டுனர் பயிற்சி பள்ளி நடத்துபவர்கள் மூலமாகவும், ஒருசில தனிநபர்கள் மூலமாக சேகரித்து அவ்வாறு சேகரிக்கப்பட்ட மொத்த லஞ்ச பணத்தை விருதுநகர் டி.வி.எஸ்.பாலசங்கா ஏஜென்சியில் பணிபுரியும், விருதுநகர் வட்டார போக்குவரத்து அலுவலகப் பணிகளை கவனித்துவரும் திரு.அருள்பிரசாத் என்பவர்மூலமாக விருதுநகர் வி.வி.வி. பெண்கள் கல்லூரிக்கு அருகில் அணுகுசாலையில் வைத்து பெற்றுக்கொள்ள இருப்பதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் மற்றும் விருதுநகர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலர்களின் வேண்டுகோளின்பேரில், நான் விருதுநகர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்திற்கு வந்து விபரத்தை கேட்டு தெரிந்துகொண்டு விருதுநகர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திருமதி.விமலா மற்றும் ஆண் மற்றும் பெண் காவலர்களுடன் இன்று 12.12.2020ம் தேதி காலை சுமார் 7.45 மணிக்கு விருதுநகர் ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தை விட்டு புறப்பட்டு, விருதுநகர் வி.வி.வி.

பெண்கள் கல்லூரிக்கு அருகில் இருந்து காலை சுமார் 8.00 மணிமுதல் கண்காணித்தும், விருதுநகர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் இரவு சுமார் 11.30 மணிவரை திடீர் இணை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேற்படி திடீர் இணை ஆய்வு சோதனையின்போது விருதுநகர் வட்டார போக்குவரத்து அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I திருமதி.கலைச்செல்வி என்பவரிடமிருந்து ரூ.24,15,780/-ம், மதுரை வடக்கு வட்டார போக்குவரத்து அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I திரு.சண்முகஆனந்த் என்பவரிடமிருந்து ரூ.1,43,250/-ம் மற்றும் விருதுநகர் பாலசங்கா டி.வி.எஸ். ஏஜென்சியில் பணிபுரியும் திரு.அருள்பிரசாத் என்பவரிடமிருந்து ரூ.7,850/-ம் கணக்கில் காட்டப்படமுடியாத பணமாக கைப்பற்றப்பட்டது. இதுதொடர்பாக விருதுநகர் வட்டார போக்குவரத்து அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I திருமதி.கலைச்செல்வி, அவரது கணவர் திரு.ராஜா, மதுரை வடக்கு வட்டார போக்குவரத்து அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I திரு.சண்முகஆனந்த் மற்றும் விருதுநகர் பாலசங்கா டி.வி.எஸ். ஏஜென்சியில் பணிபுரியும் திரு.அருள்பிரசாத் ஆகியோர்கள் தனித்தனியே வாக்குமூலம் அளித்துள்ளனர். இதுதொடர்பாக எனது செயல்முறை நடவடிக்கைகள் இன்று 12.12.2020ம் தேதி காலை 8.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு இரவு 11.30 மணிக்கு முடிக்கப்பட்டது. அந்த திடீர் இணை ஆய்வு விபரம் பின்வருமாறு. திடீர் இணை ஆய்வு, 1. ஆய்வு செய்த இடம் மற்றும் அலுவலகம் : விருதுநகர் வி.வி.வி. பெண்கள் கல்லூரி அருகில், விருதுநகர் மற்றும் விருதுநகர் வட்டார போக்குவரத்து அலுவல கட்டிட வாளகத்திற்குள், விருதுநகர், 2. ஆய்வு ஆரம்பிக்கப்பட்ட நாள் மற்றும் நேரம்:12.12.2020 ஆம் தேதி காலை சுமார் 08.00 மணியளவில், 3. ஆய்விற்கு தலைமை ஏற்ற அலுவலர் : திரு.செந்திவேல் (47/2020) தனி வட்டாட்சியர் (நி.எ.) ரயில்வே அகலப்பாதை இரட்டிப்பு அலகு-1, விருதுநகர் மற்றும் துணை ஆய்வுக்குழு அலுவலர். 4. ஆய்வின்போது ஆஜரில் இருந்த அலுவலர்கள் : 1) திருமதி.விமலா, காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, விருதுநகர். 2) செல்வி.சி.மாரீஸ்வரி, பெண் காவலர் 249, ஐந்தாம் படைப்பிரிவு, மாவட்ட ஆயுதப்படை, விருதுநகர். 3) திருமதி.கி.வெண்ணிலா, பெண் காவலர் 3645, முதலாம் படைப்பிரிவு, மாவட்ட ஆயுதப்படை, விருதுநகர். 5.ஆய்வு செய்யப்பட்டபோது இருந்த அரசு அலுவலர்கள் :1) திருமதி.கலைச்செல்வி (44/2020), மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I, வட்டார போக்குவரத்து அலுவலகம், விருதுநகர்.2)திரு.சண்முகஆனந்த் (37/2020), மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I, வட்டார போக்குவரத்து அலுவலகம், மதுரை வடக்கு, மதுரை மாவட்டம். 3)திரு.ரா.துரைப்பாண்டி (29/2020), இளநிலை உதவியாளர்,

வட்டார போக்குவரத்து அலுவலகம், விருதுநகர். 6. ஆய்வு செய்யப்பட்டபோது இருந்த தனிநபர்கள் : 1)திரு.அருள்பிரசாத் (52/2020), த/பெ.ஸ்தனிஸ்லாஸ், கதவு எண்.38/29, கஸ்தூரிபாய் நகர், பாண்டியன் நகர், விருதுநகர். 2) திரு.ராஜா (52/2020), த/பெ.நடேசன், கணேசா காம்ப்ளக்ஸ், மகுடம்சாவடி, சங்ககிரி தாலுகா, சேலம் மாவட்டம். விருதுநகர்-மதுரை தேசிய நெடுஞ்சாலை-44ன் கிழக்கு பக்கம் விருதுநகர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் பணிபுரிந்துவரும் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I என்பவர், பொதுமக்களின் புதிய வாகனத்தை பதிவு செய்வது, வாகன தகுதிச்சான்று வழங்குவது, வாகன உரிமம் பெற ஆய்வு செய்வது போன்றவற்றிற்காக விருதுநகர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தை அணுகும்போது, அவற்றை செய்துதர, பொதுமக்களிடமிருந்து லஞ்சமாக பணம் வசூல் செய்வதாகவும், அந்த லஞ்ச பணத்தை ஓட்டுனர் பயிற்சி பள்ளி நடத்துபவர்கள் மூலமாகவும், ஒருசில தனிநபர்கள் மூலமாக சேகரித்து அவ்வாறு சேகரிக்கப்பட்ட மொத்த லஞ்ச பணத்தை விருதுநகர் டி.வி.எஸ்.பாலசங்கா ஏஜென்சியில் பணிபுரியும், விருதுநகர் வட்டார போக்குவரத்து அலுவலகப் பணிகளை கவனித்துவரும் திரு.அருள்பிரசாத் என்பவர்மூலமாக இன்று (12.12.2020) விருதுநகர் வி.வி.வி. பெண்கள் கல்லூரிக்கு அருகில் அணுகுசாலையில் வைத்து பெற்றுக்கொள்ள இருப்பதாக கிடைக்கப்பெற்ற நம்பகமான தகவலின் அடிப்படையில் சம்பந்தப்பட்ட மேல் அதிகாரி அவர்களின் அனுமதியின்பேரிலும், உயர் அதிகாரிகளின் உத்தரவுப்படியும் இன்று 12.12.2020ஆம் தேதி காலை சுமார் 8.00 மணியிலிருந்து காலம்3 மற்றும் 4ல் கண்ட அலுவலர்கள் சகிதம் விருதுநகர் வி.வி.வி. பெண்கள் கல்லூரிக்கு அருகில் இருந்து கண்காணித்துக்கொண்டிருந்தபோது, TN 67 BD 1395 TVS Star City என்ற பதிவு எண் கொண்ட இருசக்கர வாகனத்தில் ஹெல்மெட் அணிந்து, லைட் புளு கலர் சட்டையில் TVS என்று எழுத்து தைக்கப்பட்ட அரைக்கை சட்டை மற்றும் டார்க் புளு கலர் பேண்ட் அணிந்திருந்த ஒரு நபர் காலை சுமார் 9.15 மணியளவில் விருதுநகர் வி.வி.வி. பெண்கள் கல்லூரி அருகில் வந்து, அவர் வி.வி.வி. வன்னியப்பெருமாள் பெண்கள் கல்லூரி முன்பாக அணுகுசாலையில் ஒன்றன்பின் ஒன்றாக நின்றுகொண்டிருந்த TN 52 L 5728 MARUTI SUZUKI DZIRE மற்றும் TN 52 Q 3024 TATA HARRIER என்ற இரண்டு நான்கு சக்கர வாகனங்களில் TN 52 L 5728 MARUTI SUZUKI DZIRE என்ற நான்கு சக்கர வாகனத்தின் அருகில் சென்று, அவர் ஓட்டிவந்த இருசக்கர வாகனத்தில் இருந்த ஒரு மஞ்சள் நிற பையை எடுத்து ஓட்டுநர் இருக்கையில் இருந்த பெண் நபரிடம் கொடுத்துக்கொண்டிருந்தார். உடனே அந்த இரண்டு நான்கு சக்கர வாகனங்களையும், ஒரு இருசக்கர வாகனத்தையும் மறித்து,

அவர்களிடம் தன்னை விருதுநகர் மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் என்றும், மற்றொருவரை விருதுநகர் மாவட்ட லஞ்சஒழிப்புத்துறை ஆய்வாளர் என்றும், உடன் இருந்தவர்களை குழுவினர் என்றும் அறிமுகம் செய்துகொண்டு திடீர் சோதனை செய்யவிருப்பதாக சொல்லி, அந்த இடமானது தேசிய நெடுஞ்சாலை என்பதாலும், அந்த இடத்தில் வைத்து திடீர் சோதனை மேற்கொண்டால் பொதுமக்கள் கூட்டம் கூடிவிடுவார்கள் என்பதாலும், தேசிய நெடுஞ்சாலை என்பதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படும் என்பதாலும் அந்த இரண்டு நான்குசக்கர வாகனங்களையும் மற்றும் இருசக்கர வாகனத்தையும், வாகனத்திலிருந்தவர்களையும், அந்தந்த வாகனங்களுடன் அழைத்துக்கொண்டு விருதுநகர் வட்டார போக்குவரத்து அலுவலகத்திற்கு அழைத்துவரப்பட்டது. பின்னர் TN 52 L 5728 MARUTI SUZUKI DZIRE என்ற நான்கு சக்கர வாகனத்தின் ஓட்டுநர் இருக்கையில் இருந்த காலம் 5 வரிசை எண்.1ல் கண்ட பெண்நபரிடமும், அருகிலிருந்த இருக்கையில் இருந்த காலம் 6 வரிசை எண்.2ல் கண்ட நபரிடமும் திடீர் இணை ஆய்வு பற்றிய விபரம் சொல்லி விசாரித்தபோது, அவர் விருதுநகர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-Iஆக பணிபுரியும் திருமதி.கலைச்செல்வி என்றும், அவரது அருகில் இருந்தவர் காலம் 6 வரிசை எண்.2ல் கண்ட அவரது கணவர் திரு.ராஜா என்றும், அந்த வாகனமானது காலம் 6 வரிசை எண்.2ல் கண்ட நபரின் பெயரில் உள்ள அவர்களது சொந்த வாகனம் என்றும், வார விடுமுறையில் சொந்த ஊருக்கு செல்வதற்காக கிளம்பி சென்றுகொண்டிருக்கும்போது, அருகில் TN 67 BD 1395 TVS Star City என்ற இருசக்கர வாகனத்துடன் நின்றுகொண்டிருந்த காலம் 6 வரிசை எண்.1ல் கண்ட நபரான விருதுநகர் டி.வி.எஸ்.பாலசங்கா ஏஜென்சியில் பணிபுரியும் அருள்பிரசாத் என்பவர், ஏதோ ஒரு பொருள் கொண்டுவந்து கொடுப்பதாக கூறியதால், அதை வாங்கிக்கொண்டு சொந்த ஊரான சங்ககிரிக்கு செல்வதற்காக அந்த இடத்தில் நின்று கொண்டிருந்ததாகவும், அவர் கொடுத்த பொருளானது மஞ்சள்நிற பையில் உள்ளது என்றும், அது தன்னிடம்தான் உள்ளது என்றும், அவருடைய வாகனத்திற்கு பின்னால் நின்றுகொண்டிருந்த மற்றொரு நான்குசக்கர வாகனமான TN 52 Q 3024 TATA HARRIER-ம் காலம் 6 வரிசை எண்.2ல் கண்ட நபரின் பெயரில் உள்ள அவர்களது சொந்த வாகனம் என்றும், அதில் மதுரை வடக்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I ஆக பணிபுரியும் திரு.சண்முகஆனந்த் என்பவர் அவருடைய சொந்த ஊரான நாமக்கல் செல்வதற்காக உள்ளார் என்றும், அந்த வாகனத்தில் அவர்களுடைய பொருட்கள் உள்ள மூன்று பேக்குகள் உள்ளன என்றும் கூறினார். பின்னர், அந்த நான்கு சக்கர வாகனமான TN 52 Q 3024 TATA

HARRIER வாகனத்தில் ஓட்டுநர் இருக்கையில் காலம் 5 வரிசை எண்.2ல் கண்ட நபரிடம் திடீர் இணை ஆய்வு பற்றிய விபரம் சொல்லி விசாரித்தபோது, அவர் காலம் 5 வரிசை எண்.1ல் கண்ட நபர் கூறியதுபோல், மதுரை வடக்கு வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-1 ஆக பணிபுரியும் திரு.சண்முகஆனந்த் என்றும், அவர் அமர்ந்திருக்கும் நான்கு சக்கர வாகனமானது காலம் 5 வரிசை எண்.1ல் கண்ட நபரின் கணவரான காலம் 6 வரிசை எண்.2ல் கண்ட நபரின் பெயரில் உள்ள வாகனம் என்றும், வாகனத்தில் 5 பேக்குகள் உள்ளது என்றும், அதில் 2 பேக்குகள் மட்டும் தன்னுடையது என்றும், மற்ற 3 பேக்குகளும் காலம் 5 வரிசை எண்.1ல் கண்ட நபரின் பேக்குகள் என்றும், வார விடுமுறைக்கு சொந்த ஊரான நாமக்கல் செல்வதற்காக காலம் 5 வரிசை எண்.1ல் கண்ட நபரின் வாகனத்தில் சென்றுவிடலாம் என்று எண்ணி, அந்த இடத்தில் அவருடைய அந்த வாகனத்தை ஓட்டிவந்து நின்றுகொண்டிருந்ததாக கூறினார். பின்னர் காலம் 6 வரிசை எண்.2ல் கண்ட காலம் 5 வரிசை எண்.1ல் கண்ட நபரின் கணவர் திரு.ராஜா என்பவரையும், அவரது கையில் வைத்திருந்த ABT ஜீவல்லர்ஸ் என்ற பெயருள்ள பிரௌன் கலர் கைப்பையையும் சோதனை செய்ய, அவரது பேண்ட் பாக்கெட்டிலிருந்த மணிபர்ஸில் பணம் ரூ.7,300/-ம், அவர் வைத்திருந்த அவரது ABT ஜீவல்லர்ஸ் என்ற பெயருள்ள பிரௌன் கலர் கைப்பையில் பணம் ரூ.3890/-ம் இருந்தது. அதுபற்றி அவரிடம் கேட்க, அது அவரது சொந்தபணம் என்றும், செலவுக்காக வைத்துள்ளதாகவும் கூறினார். ஆகையால் அந்த பணம் அவரிடமே ஒப்படைக்கப்பட்டது. தொடர்ந்து காலம் 5 வரிசை எண்.1ல் கண்ட நபரை சோதனை செய்ய, அவர் கையில் வைத்திருந்த கருப்புக்கலர் கைப்பையில் கத்தை, கத்தையாக பணம் இருந்தது. அவற்றை எடுத்து எண்ணிப்பார்க்க அதில் ரூ.500x132= ரூ.66,000, ரூ.200X1= ரூ.200, ரூ.100x3= ரூ.300, ரூ.50 X 2= ரூ.100, ரூ.20x 3= ரூ.60, ரூ.10X 5= ரூ.50 ஆக மொத்தம் ரூ.66,710/- இருந்தது. பின்னர் அவர் இருந்த TN 52 L 5728 MARUTI SUZUKI DZIRE என்ற நான்குசக்கர வாகனத்தின் பின் இருக்கையில் இருந்த சோல்டர் பேக்கை சோதனை செய்ய, அதில் கத்தை, கத்தையாக 500 ரூபாய் நோட்டுக்கள், 50 ரூபாய் நோட்டுக்கள் துணிகளுக்குள் இருந்தது. அவற்றை எடுத்து எண்ணிப்பார்க்க, ரூ.500x 200= ரூ.1,00,000, ரூ.50x 39= ரூ.1950, ரூ.20x 1= ரூ.20, ரூ.10x 8= ரூ.80, ஆக மொத்தம் ரூ.1,02,050/- இருந்தது. அதுபற்றி அவரிடம் கேட்க, அவரது சொந்தப்பணம் என்றும், செலவுக்காக வைத்துள்ளதாகவும் கூறினார். அவர் சொல்வது ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லாததால், அவரால் கணக்கில் காட்டப்படமுடியாத பணமாகக் கருதி, அந்தப்பணம் ரூ.66,710/- + ரூ.1,02,050/- ஆக மொத்தம் ரூ.1,68,760/- கைப்பற்றப்பட்டது. பின்னர் அவர், அதாவது காலம் 5 வரிசை எண்.1ல் கண்ட நபர், காலம் 6

வரிசை எண்.1ல் கண்ட நபரான விருதுநகர் டி.வி.எஸ்.பாலசங்கா ஏஜென்சியில் பணிபுரியும் அருள்பிரசாத் என்பவர் கொடுத்த பொருளானது மஞ்சள்நிற பையை அவர் இருந்த TN 52 L 5728 MARUTI SUZUKI DZIRE என்ற நான்குசக்கர வாகனத்தின் ஓட்டுநர் இருக்கைக்கு இடதுபக்கம் இருந்த இருக்கையின் அடிப்பகுதியிலிருந்து எடுத்து ஆஜர் செய்தார். அதில் கத்தை, கத்தையாக ரப்பரால் சுற்றப்பட்ட எட்டு கட்டுகள் கொண்ட ரூபாய் நோட்டு கட்டுகள் இருந்தன. அதில் 1வது கட்டில் Ranjith Pending என்று எழுதப்பட்ட வெள்ளைநிற துண்டு சீட்டில் 5.12.20 = 16500, 7.12.20 = 12400, 8.12.20 = 13000, 9.12.20 = 9400, மொத்தம் ரூ.51300 என்று எழுதப்பட்டும், 9.12.2020 ஆம் தேதியிட்ட வெள்ளை துண்டு சீட்டில் FC = 44800, Reg = 14200 Test = 75100, TO =12700 Total =1,46,800 - 59400 = 87400 Kannan PVRR 1000, Total =88400, Kannan Less 1000 = 87400/- என்று எழுதப்பட்டும், அத்துடன் Fitness issued Report, Speed Governor Report, Vehicle Registration Summary Report, 9.12.20 முன்ஷ் (செக்கியூரிட்டி) என எழுதப்பட்ட பேப்பரில் பல நபர்களின் பெயர்கள் எழுதப்பட்டும், 9.12.2020 தேதி என்று எழுதப்பட்ட பேப்பரில் வண்டி நம்பர் எழுதப்பட்ட பேப்பரும், அதில் கத்தையாக இருந்த ரூபாய் நோட்டுகளை எண்ணிப்பார்க்க ரூ.500X 114= ரூ.57000, ரூ.200X 99= ரூ.19800, ரூ.100X 106= ரூ10600, ஆக மொத்தம் ரூ.87400/-ம், 2வது கட்டில் 8.12.20 என்ற தேதியிட்ட வெள்ளை துண்டு சீட்டில் FC = 36600, Reg = 15600 TO =9600 PVRI =1000, Total = 62800 Test= 99900 Total =1,62,700 Ranjith 13000 Total =1,49,700 Test RTO(-) 500 , Total 1,49,200/- என்று எழுதப்பட்டும், அத்துடன் Fitness issued Report , Speed Governor Report, Vehicle Registration Summary Report , 8.12.20 என்ற பேப்பரில் 26 வண்டிகளின் பதிவு எண்கள் எழுதப்பட்டும், 8.12.20 ஆம் தேதி என்று பல பெயர்கள் எழுதப்பட்ட பேப்பரும், அதில் கத்தையாக இருந்த ரூபாய் நோட்டுகளை எண்ணிப்பார்க்க ரூ.500X 298= ரூ.149000, ரூ.50X 4= ரூ200, ஆக மொத்தம் ரூ.149200/-ம், 3வது கட்டில் 7.12.20 என்ற தேதியிட்ட வெள்ளை துண்டு சீட்டில் FC = 46300, Reg = 33100, Test= 97500, TO =11100, LLR =3800, PVR =1000, Total = 1,92,800 Test= 99900 Total =1,62,700, Ranjith 12400 Total =1,80,400 Kannan PVR =2000 Total 1,82,400/- RTO Test (-) 1600 , Total 1,80,800/- SVPR RTO =30000 Total =2,10,800 M PDL (-) 1,20,000 Total =90800 என்று எழுதப்பட்டும், அத்துடன் Fitness issued Report , Speed Governor Report, Vehicle Registration Summary Report , 7.12.2020 ஆம் தேதி என்று பல பெயர்கள் எழுதப்பட்ட பேப்பரும், 7.12.20 என்ற பேப்பரில் 32 வண்டிகளின் பதிவு எண்கள் எழுதப்பட்டும், அதில் கத்தையாக இருந்த ரூபாய் நோட்டுகளை எண்ணிப்பார்க்க ரூ.2000X 4=

ரூ.8000, ரூ.500X 65= ரூ.32500, ரூ.200X 150= ரூ.30000, ரூ.100X 201= ரூ.20100, ரூ.50X 4= ரூ200, ஆக மொத்தம் ரூ.90800/-ம், 4வது கட்டில் 05.12.20 ஆம் தேதியிட்ட Fitness issued Report பேப்பரின் கீழே FC = 16700, Reg = 10200, Test= 94200, TO =3800, LLR =2600, Total = 1,27500 Ranjith 16500 Total =1,11,000 Test RTO (-) 1700 Total =1,09,300, Kannan PVR =1000, Total = 1,10,300 Kannan PVR =1000 Total = 1,11,300 என்று எழுதப்பட்டும், அத்துடன் Speed Governor Report, Vehicle Registration Summary Report, 5.12.2020ஆம் தேதி என்று பெயர்கள் எழுதப்பட்ட பேப்பரும், 5.12.20 என்ற எழுதப்பட்ட பேப்பரில் 14 வண்டிகளின் பதிவு எண்கள் எழுதப்பட்டும், அதில் கத்தையாக இருந்த ரூபாய் நோட்டுகளை எண்ணிப்பார்க்க ரூ.2000X 17= ரூ.34000, ரூ.500X 154= ரூ.77000, ரூ.200X 1= ரூ.200, ரூ.100X 1= ரூ.100, ஆக மொத்தம் ரூ.1,11,300/-ம், 5வது கட்டில் 10.12.20 என்ற தேதியிட்ட வெள்ளை துண்டு பேப்பரில் FC = 63100, Reg = 20400, TO =6100, Total = 89600 Pending Deivam 67, Vimal 58, மீசை 58, Balaguru 53 மொத்தம் 236 (-) 23600 Total =66000, Test கணக்கு Pending என்று எழுதப்பட்டும் அத்துடன் Fitness issued Report Speed Governor Report, Vehicle Registration Summary Report 10.12.20 என்ற பேப்பரில் பல 1 முதல்17 வண்டி நம்பர்கள் எழுதப்பட்டும், அதில் கத்தையாக இருந்த ரூபாய் நோட்டுகளை எண்ணிப்பார்க்க ரூ.2000X 2= ரூ.4000, ரூ.500X 124= ரூ.62000, ஆக மொத்தம் ரூ.66000/-ம், 6வது கட்டில் வெள்ளை துண்டு சீட்டில் Deivam 6700, Vimal 5800, மீசை 5800, Balaguru 5300 Total =23600/- எழுதப்பட்டும் அதில் கத்தையாக இருந்த பணத்தினை எண்ணிப்பார்க்க ரூ.2000X 2= ரூ.4000, ரூ.500X35= ரூ.17500, ரூ.200X9= ரூ.1800, ரூ.100X3= ரூ.300 ஆக மொத்தம் ரூ.23600/-ம், 7வது கட்டில் சிறிய வெள்ளை கவரில் பூவலிங்கம் என்று பெயரெழுதப்பட்டு 240 என்று வட்டமிட்டு எழுதப்பட்டும் இருந்ததில் கத்தையாக இருந்த பணத்தினை எண்ணிப்பார்க்க ரூ.500X48= ரூ.24000/-ம், 8வது கட்டில் Rathimeena என்று எழுதப்பட்ட சிறிய பிரௌன் நிற கவரில் இருந்த பணத்தை எண்ணிப்பார்க்க ரூ.5000/-ம் (ரூ.500X10= ரூ.5000) இருந்தது. இதுபற்றி அவரிடம் கேட்க, அவை விருதுநகர் TVS ஷோரூமில் கிளர்க்காக வேலைப்பார்த்து வரும் அருள்பிரசாத் என்பவர் கொடுத்தவை என்றும், அதில் பணம் இருக்கும் என்று தனக்கு தெரியாது என்றும், ஏதோ ஒரு பொருள் தருவதாக சொன்னதன்பேரில் அதை நான் வாங்கி வைத்தேன் என்றும் கூறினார். அவர் சொல்வது ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லாததால், அந்த எட்டு கட்டுகளாக உள்ள மொத்தப்பணம் ரூ.5,57,300/-ம் அவரால் கணக்கில் காட்டப்படமுடியாத பணமாக கருதி, அந்த பணம் ரூ.5,57,300/- மற்றும் அந்த பணம் இருந்த மஞ்சள்பை ஆகியவை கைப்பற்றப்பட்டன.

தொடர்ந்து அவருடைய வாகனத்திற்கு பின்னால் நின்றுகொண்டிருந்த மற்றொரு நான்குசக்கர வாகனமான TN 52 Q 3024 TATA HARRIER-ல் இருந்த காலம் 5 வரிசை எண்.2ல் கண்ட நபரையும், அவர் இருந்த நான்குசக்கர வாகனத்தையும் சோதனை செய்தபோது, வாகனத்தின் பின் இருக்கையில் மடிக்கணிணி வைக்கக்கூடிய ஷோல்டர் பேக் ஒன்றும், ரீஜெண்ட் தொழிற்பேட்டை, எட்டயபுரம் ரோடு, கோவில்பட்டி என்று அச்சடிக்கப்பட்ட டிராவல் பேக் ஒன்றும், வாகனத்தின் பின்பகுதியில் (டிக்கியில்) 3 டிராவல் பேக்குகள் இருந்தன. அவைபற்றி அவரிடம் கேட்க, பின் இருக்கையில் இருந்த மடிக்கணிணி வைக்கக்கூடிய ஷோல்டர் பேக் மற்றும் ரீஜெண்ட் தொழிற்பேட்டை, எட்டயபுரம் ரோடு, கோவில்பட்டி என்று அச்சடிக்கப்பட்ட டிராவல் பேக் ஆகியவை அவருடையது என்றும், வாகனத்தின் பின்பகுதியில் (டிக்கியில்) உள்ள 3 டிராவல் பேக்குகளும் காலம் 5 வரிசை எண்.1ல் கண்ட நபரின் பேக்குகள் என்று கூறினார். ஆகையால் அதுபற்றி காலம் 5 வரிசை எண்.1ல் கண்ட நபரிடம் கேட்க, அவர் அதை ஒப்புக்கொண்டார். பின்னர் மேற்படி பேக்குகளை ஒவ்வொன்றாக எடுத்து சோதனை செய்ய, அதில் வாகனத்தின் பின்பகுதியில் (டிக்கியில்) இருந்து எடுக்கப்பட்ட பச்சை மற்றும் வெள்ளை நிற போத்தீஸ் பேக்கில் வாழ்க வளமுடன் என்று எழுதப்பட்ட மஞ்சள் நிற துணிப்பையில் உள்ளே இருந்த தி ரீஜெண்ட் என்று எழுதப்பட்ட வெள்ளை நிற துணிப்பையின் உள்ளே கத்தை கத்தையாக பணம் இருந்தது. அதை எடுத்து எண்ணிப்பார்க்க ரூ.2000X 100= ரூ.2,00,000/- ரூ.500X 2600= ரூ.13,00,000/- ஆக மொத்தம் ரூ.15,00,000/- இருந்தது. மேலும் அந்த பேக்கில் இருந்த Balasanka TVS என்ற எழுதப்பட்ட புளூ நிற கைப்பையில் கத்தையாக பணம் இருந்தது. அதை எடுத்து எண்ணிப்பார்க்க ரூ.2000X 22= ரூ44000 ரூ.500X41= ரூ20,500, ரூ.200X 447= ரூ89,400 ரூ100X 333= ரூ33,300, ரூ 50X 49= ரூ2,450, ரூ20X 2= ரூ40, ரூ10X 3= ரூ60, ஆக மொத்தம் ரூ.1,89,720/- இருந்தது. அவைபற்றி அவரிடம் கேட்க, அந்த பணம் முழுவதும் அவரது கணவரான காலம் 6 வரிசை எண்.2ல் கண்ட நபரின் பணம் என்றும், அவரது கணவர் எல்.ஐ.சி. முகவராக உள்ளதால், அதற்குரிய பணம் மற்றும் விவசாயத்தின்மூலம் வருமானமாக வந்த பணம் ஆகியவற்றின் மொத்த கூட்டுத்தொகை என்றும் கூறினார். அதற்குரிய ஆவணங்கள் ஏதும் உள்ளதா என்று கேட்க, அதற்கு ஆவணங்கள் ஏதும் இல்லை என்று கூறினார். மேலும் காலம் 6 வரிசை எண்.2ல் கண்ட நபர் எல்.ஐ.சி. முகவராக உள்ளதால் அதற்குரிய பணம் என்று கூறியதால், அதுபற்றி அவரிடம் கேட்க, அதற்கு அவர் அந்த பணம்தான் என்று கூறினார். அதற்கு ஆவணங்கள் ஏதும் உள்ளதா என்று அவரிடமும் கேட்க, அவரும் ஆவணங்கள் ஏதும் இல்லை என்று கூறினார். ஆகையால் அந்த பணம் ரூ.15,00,000/- + ரூ.1,89,720/- ஆக மொத்தம் ரூ.16,89,720/- காலம் 5 வரிசை எண்.1ல் கண்ட

நபரின் கணக்கில் காட்டப்படமுடியாத பணமாக கருதி, அந்த பணம் ரூ.16,81,720/- மற்றும் பணம் இருந்த தி ரீஜெண்ட் என்று எழுதப்பட்ட வெள்ளை நிற துணிப்பை மற்றும் Balasanka TVS என்ற எழுதப்பட்ட புளு நிற கைப்பை ஆகியவை கைப்பற்றப்பட்டன. தொடர்ந்து வாகனத்தின் பின்பகுதியில் (டிக்கியில்) இருந்து எடுக்கப்பட்ட மற்றொரு லைட் பிரௌன் மற்றும் கருப்பு கலந்த போத்தீஸ் பெயருள்ள பேக்கில் இரண்டு நகைபெட்டியும், வட்ட வடிவிலான பிளாஸ்டிக் டப்பாவும் இருந்தது. அதில் ஜோஸ் ஆலுக்காஸ் என்ற பெயரிட்ட நகைப்பெட்டியில் 1)சுமார் 7.25 பவுண் எடையுள்ள மாங்கா டிசைன் கொண்ட மாலை-1, 2)சுமார் 5.75 பவுண் எடையுள்ள லட்சுமி படம் பொறித்த ஆரம்-1, 3)சுமார் 3 பவுண் எடையுள்ள வெள்ளை மற்றும் பச்சை கல் வைத்த நெக்லஸ்-1, 4)சுமார் 1.75 பவுண் எடையுள்ள வெள்ளை முத்து மற்றும் வெள்ளை கல் வைத்த நெக்லஸ்-1, 5)சுமார் 7 கிராம் எடையுள்ள பெரியதோடு செட்-1(எண்ணம்-2), 6)சுமார் 2.55 கிராம் மதிப்பு எடையுள்ள கம்மல் செட்-1(எண்ணம்-2), 7)சுமார் 2.760 கிராம் எடையுள்ள வைரக்கல் பதித்த கம்மல் செட்-1(எண்ணம்-2), 8)சுமார் 0.780 கிராம் எடையுள்ள சைடு கம்மல் செட்-1(எண்ணம்-2), 9)சுமார் 0.900 கிராம் மதிப்பு எடையுள்ள டாலர்-1 ஆகிய 13 எண்ணம் கொண்ட நகைகள் இருந்தன. மற்றொரு ஸ்ரீகுமரன் தங்க மாளிகை என்ற பெயரிட்ட நகைப்பெட்டியில் 1) சுமார் 6.5 பவுண் எடையுள்ள பெரிய மாலை-1, 2)சுமார் 8.75 பவுண் எடையுள்ள கழுத்து நெக்லஸ்-1 (பின் செயின் கொக்கி இல்லை), 3)சுமார் 2.5 பவுண் எடையுள்ள சிறிய கம்பி நெக்லஸ், 4)சுமார் 10 பவுண் எடையுள்ள மூன்று வட கல் முகப்பு செயின் ஆக மொத்தம் எண்ணம்-4ம் மற்றும் வெள்ளை முத்து, பச்சைநிற கல் பதித்த கவரிங் நெக்லஸ் ஒன்றும், வெள்ளை முத்து, பச்சைநிற கல் பதித்த கம்மல் அதனுடன் சேர்ந்த கம்மல் செட்-1(எண்ணம்-2)ம் இருந்தது. மற்றொரு பூ படம் போட்ட சிகப்பு மற்றும் வெள்ளைநிற வட்ட வடிவிலான பிளாஸ்டிக் டப்பாவில் உதிரியாக 1)சுமார் 13 பவுண் எடையுள்ள லட்சுமி டாலர் ஆரம்-1, 2)சுமார் 5 பவுண் எடையுள்ள வலையல் 2செட் (எண்ணம்-4), 3)சுமார் 4.5 பவுண் எடையுள்ள நெக்லஸ்-1, 4)சுமார் 6 பவுண் எடையுள்ள சிகப்பு கல்பதித்த பெரிய மாலை-1, 5)சுமார் 2.5 பவுண் எடையுள்ள சிகப்பு கல்பதித்த சின்ன நெக்லஸ்-1, சுமார் 3.75 பவுண் மதிப்பு எடையுள்ள வைரக்கல் பதித்த நெக்லஸ்-1, 6)சுமார் 2.5 பவுண் எடையுள்ள கருப்புகலர் நிறம் உள்ள மூன்று பூக்கள் கொண்ட டிசைன் நெக்லஸ்-1 ஆகிய நகைகளும், புளுக்கலர் ஜோஸ் ஆலுக்காஸ் பெயர் உள்ள சுருக்குபையில் 1)சுமார் 16.5 பவுண் எடையுள்ள லட்சுமி டாலர் செயின்-1, 2)சுமார் 2 பவுண் எடையுள்ள கைச்செயின்-1, 3)சுமார் 0.75 பவுண் எடையுள்ள வைரக்கல் பதித்த மோதிரம் -1, 4)சுமார் 3.300 கிராம் எடையுள்ள தங்க மோதிரம் ஆகிய நகைகளும், மற்றொரு ஜோஸ் ஆலுக்காஸ் பெயர் உள்ள வெள்ளைச்சுருக்கு பையில் 1)சுமார் 2 ½ பவுண் எடையுள்ள பால்ஸ் ஜிமிக்கி தோடு -1செட் (எண்ணம் 2), 2)சுமார் 2 பவுண்

எடையுள்ள மயில் டிசைன் உள்ள ஜிமிக்கி தோடு-1 செட் (எண்ணம் 2), 3)சுமார் 1 பவுண் எடையுள்ள அடுக்கு தோடு ஆட்டம் -1 செட் (எண்ணம் 2), 4)சுமார் 3.170 கிராம் மாங்கா டிசைன் டைமண்ட் தோடு-1 செட் (எண்ணம் -2), 5)சுமார் 1.820 கிராம் எடையுள்ள வைரக்கல் பதித்த ஸ்டார் தோடு-1 செட் (எண்ணம் 2), 6)சுமார் .290 மில்லி கிராம் எடையுள்ள சிறிய தங்க காசு-3 ஆகிய 13 எண்ணங்கள் கொண்ட நகைகளும், மற்றொரு ஜோஸ் ஆலுக்காஸ் பெயர் உள்ள வெள்ளைச்சுருக்கு பையில் 1)சுமார் 4.25 பவுண் எடையுள்ள கேரளா வளையல் -1செட் (எண்ணம் 2), 2) சுமார் 4 பவுண் எடையுள்ள கை காப்பு -1, 3) சுமார் .75 பவுண் எடையுள்ள வைரக்கல் பதித்த கைச்செயின் (ஒடிந்தது) -1, 4)சுமார் 2.50 பவுன் எடையுள்ள பிளாட்டினம் கோட்டிங் கொடுக்கப்பட்ட நெக்லஸ்-1, 5)சுமார் 1.50 பவுண் எடையுள்ள முத்துக்கட்டிய சிவப்புக்கல் பதித்த ஜிமிக்க தோடு - 1 செட் (எண்ணம் 2) ஆகிய 7 எண்ணங்கள் கொண்ட நகைகளும் ஆகமொத்தம் சுமார் 122¾ பவுண் தங்க நகைகள் இருந்தன. அதுபற்றி அவரிடம் கேட்க, மேற்படி நகைகள் அனைத்தும் அவரது திருமணத்தின்போது, அவரது பெற்றோர் கொடுத்த நகைகள் மற்றும் அவரது கணவர் சம்பாத்தியத்தில் வாங்கிய நகைகள் என்றும், அந்த நகைகளை அவரது கணவரான காலம் 6 வரிசை எண்.2ல் கண்ட நபர் கொரோனா தொற்று நோயால் கடந்த 25.11.2020ஆம் தேதி பாதிக்கப்பட்டு ஊட்டி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்ததாலும், அவருடைய மகளும் அவரது அம்மா வீட்டில் இருந்ததாலும், வீட்டில் யாரும் இல்லாததாலும் அவருடன் பேக்குகளில் வைத்திருந்ததாகவும் கூறினார். ஆகையால் அந்த நகைகள் அனைத்தும் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டன. பின்னர் காலம் 5 வரிசை எண்.2ல் கண்ட நபர் இருந்த வாகனத்தின் பின் இருக்கையில் இருந்த மடிக்கணிணி வைக்கக்கூடிய சோல்டர் பேக்கை சோதனை செய்ய, அந்த பேக்கில் இருந்த Balasanka TVS என்ற எழுதப்பட்ட புளூ நிற கைப்பையில் கத்தையாக பணம் இருந்தது. அதை எடுத்து எண்ணிப்பார்க்க ரூ.2000X 18= ரூ.36,000, ரூ.500X173= ரூ.86,500, ரூ.200X38= ரூ.7,600/-, ரூ100X 124= ரூ.12,400/- ரூ 50X 9= ரூ.450/-, ரூ20X 3= ரூ60, ரூ10X24= ரூ.240, ஆக மொத்தம் ரூ.1,43,250/- இருந்தது. அதுபற்றி அவரிடம் கேட்க, அந்த பணம் முழுவதும் காலம் 5 வரிசை எண்.1ல் கண்ட நபரின் பணம் என்றும், அவர்தான் அவரிடம் கொடுத்துவைத்தார் என்றும் கூறினார். ஆகையால் அதுபற்றி காலம் 5 வரிசை எண்.1ல் கண்ட நபரிடம் கேட்க, அதற்கு அவர் அந்த பணம் முழுவதும் அவருடைய பணம்தான் என்றும், அவர்தான் கொடுத்துவைத்தார் என்றும், அது அவருடைய சொந்த பணம் என்றும் கூறினார். அவர் கூறுவது ஏற்றுக்கொள்ளும்படியாக இல்லாததால் அந்த பணம் ரூ.1,43,250/- காலம் 5 வரிசை எண்.1ல் கண்ட நபரால் கணக்கில் காட்டப்படமுடியாத பணமாக கருதி, அந்த பணம்

ரூ.1,43,250/-ம் அந்த பணம் இருந்த பாலசங்கா டி.வி.எஸ். என்று அச்சிடப்பட்ட ப்ளூ நிற கைப்பையும் கைப்பற்றப்பட்டது. தொடர்ந்து ரீஜெண்ட் தொழிற்பேட்டை, எட்டயபுரம் ரோடு, கோவில்பட்டி என்று அச்சடிக்கப்பட்ட டிராவல் பேக்கை சோதனை செய்ய, அதில் கைப்பற்றக்கூடிய பணமோ, பொருளோ இல்லை. தொடர்ந்து TN 67 BD 1395 TVS Star City என்ற இருசக்கர வாகனத்திலிருந்த காலம் 6 வரிசை எண்.1ல் கண்ட நபரை சோதனை செய்ய, அவரது சட்டைப்பையில் பணம் ரூ.7,850/- இருந்தது. அதை எடுத்து எண்ணிப்பார்க்க ரூ.500X12= ரூ.6,000, ரூ.200X 1= ரூ.200, ரூ100X 8 = ரூ.800, ரூ.50X 17= ரூ.850 ஆக மொத்தம் ரூ.7,850/- இருந்தது. அதுபற்றி அவரிடம் கேட்க, அவர் பதில் ஏதும் சொல்லாமல் மௌனமாக இருந்ததால், அந்த பணம் அவரால் கணக்கில் காட்டப்படமுடியாத பணமாக கருதி, அந்த பணம் ரூ.7,850/- கைப்பற்றப்பட்டது. பின்னர் காலம் 5 வரிசை எண்.1ல் கண்ட நபரிடம் கொடுத்த மஞ்சள்பை சம்பந்தமாக கேட்க, அது அவர் கொடுத்த மஞ்சள் பைதான் என்று அடையாளம் காட்டி, அந்த மஞ்சள் பையில் அவர் ஏற்கனவே ஓட்டுனர் பயிற்சி பள்ளி நடத்துபவர்கள் மூலமாகவும், ஒருசில தனிநபர்கள் மூலமாகவும் வசூல் செய்து, அவற்றை யார், யார் எவ்வளவு கொடுத்தார்கள் என்பதை வெள்ளைப்பேப்பரில் எழுதி பணத்தை எட்டு கட்டுகளாக ரப்பர் பேண்டு போட்டு கட்டி, சுற்றி பணத்துடன் சேர்த்து கொடுத்ததாக கூறினார். ஆனால் காலம் 5 வரிசை எண்.1ல் கண்ட நபரிடம் விசாரித்தபோது, அவர் வார விடுமுறையில் சொந்த ஊருக்கு செல்வதற்காக கிளம்பி சென்றுகொண்டிருக்கும்போது, காலம் 6 வரிசை எண்.1ல் கண்ட நபரான விருதுநகர் டி.வி.எஸ்.பாலசங்கா ஏஜென்சியில் பணிபுரியும் அருள்பிரசாத் என்பவர், ஏதோ ஒரு பொருள் கொண்டுவந்து கொடுப்பதாக கூறியதால், அதை வாங்கிக்கொண்டு சொந்த ஊரான சங்ககிரிக்கு செல்வதற்காக அந்த இடத்தில் நின்று கொண்டிருந்ததாகவும், அவர் கொடுத்த பொருளானது மஞ்சள்நிற பையில் உள்ளது என்றும், அது தன்னிடம்தான் உள்ளது என்றும் கூறினார். அந்த மஞ்சள்நிற பையில் கத்தை, கத்தையாக ரப்பரால் சுற்றப்பட்ட எட்டு கட்டுகளாக ரூபாய் நோட்டு கட்டுகள் மொத்தம் பணம் ரூ.5,57,300/- இருந்தது. அதுபற்றி அவர் அவை விருதுநகர் TVS ஷோரூமில் கிளர்க்காக வேலைப்பார்த்து வரும் அருள்பிரசாத் என்பவர் கொடுத்தவை என்றும், அதில் பணம் இருக்கும் என்று தனக்கு தெரியாது என்றும், ஏதோ ஒரு பொருள் தருவதாக சொன்னதன்பேரில் அதை நான் வாங்கி வைத்தேன் என்றும் கூறியுள்ளார். ஆகையால் காலம் 6 வரிசை எண்.1ல் கண்ட நபர் முரணான பதிலை கூறியுள்ளதாக தெரிகிறது. பின்னர் காலம் 5 மற்றும் 6ல் கண்ட நபர்களின் வாக்குமூலங்கள் தனித்தனியே பதிவு செய்யப்பட்டன. இந்த திடீர் இணை ஆய்வு இன்று 12.12.2020ஆம் தேதி இரவு 11.30 மணிக்கு முடிக்கப்பட்டது.

எனவே 12.12.2020ஆம் தேதி எனது தலைமையில் விருதுநகர் வி.வி.வி. பெண்கள் கல்லூரி அருகில் மற்றும் விருதுநகர் வட்டார போக்குவரத்து அலுவலக கட்டிட வளாகத்திற்குள் திடீர் இணை ஆய்வு சோதனையின் போது விருதுநகர் வட்டார போக்குவரத்து அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I திருமதி.கலைச்செல்வி என்பவரிடமிருந்து ரூ.24,15,780/-ம், மதுரை வடக்கு வட்டார போக்குவரத்து அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I திரு.சண்முகஆனந்த் என்பவரிடமிருந்து ரூ.1,43,250/-ம் மற்றும் விருதுநகர் பாலசங்கா டி.வி.எஸ். ஏஜென்சியில் பணிபுரியும் திரு.அருள்பிரசாத் என்பவரிடமிருந்து ரூ.7,850/-ம் கணக்கில் காட்டப்படமுடியாத கைப்பற்றப்பட்ட பணம் மொத்தம் ரூ.25,66,880/-மும் பொதுமக்களின் புதிய வாகனத்தை பதிவு செய்வது, வாகன தகுதிச்சான்று வழங்குவது, வாகன உரிமம் பெற ஆய்வு செய்வது போன்றவற்றிற்காக விருதுநகர் வட்டார போக்குவரத்து அலுவலகத்தை அணுகும்போது, அவற்றை செய்துதர, பொதுமக்களிடமிருந்து லஞ்சமாக வசூல் செய்த பணத்தை ஓட்டுனர் பயிற்சி பள்ளி நடத்துபவர்கள் மூலமாகவும், ஒருசில தனிநபர்கள் மூலமாகவும் விருதுநகர் டி.வி.எஸ்.பாலசங்கா ஏஜென்சியில் பணிபுரியும், விருதுநகர் வட்டார போக்குவரத்து அலுவலகப் பணிகளை கவனித்துவரும் திரு.அருள்பிரசாத் என்பவர்மூலமாக பெற்ற லஞ்சப்பணம் என தெரியவந்ததால், விருதுநகர் வட்டார போக்குவரத்து அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I திருமதி.கலைச்செல்வி, மதுரை வடக்கு வட்டார போக்குவரத்து அலுவலக மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை-I திரு.சண்முகஆனந்த், விருதுநகர் பாலசங்கா டி.வி.எஸ். ஏஜென்சியில் பணிபுரியும் திரு.அருள்பிரசாத் ஆகியோர்கள்மீது வழக்குப்பதிவு செய்து நடவடிக்கை எடுக்க என்னுடைய செயல்முறை நடவடிக்கையின் அறிக்கை, திருமதி.கலைச்செல்வி, அவரது கணவர் திரு.ராஜா, திரு.சண்முகஆனந்த் மற்றும் திரு.அருள்பிரசாத் ஆகியோர்களின் வாக்குமூலங்கள் ஆகியவற்றை இத்துடன் இணைத்து கைப்பற்றப்பட்ட பணம், அந்த பணம் இருந்த மஞ்சள்பை மற்றும் பேக்குகள் ஆகியவற்றுடன் இன்று (13.12.2020) அதிகாலை 2.30 மணிக்கு தங்களிடம் புகார் மனுவை அளிக்கிறேன். ஒப்பம் (செந்திவேல், 12.12.2020) தனி வட்டாட்சியர் (நி.எ.) ரயில்வே அகலப்பாதை இரட்டிப்பு அலகு-1, விருதுநகர் மற்றும் துணை ஆய்வுக்குழு அலுவலர்.

Sir, Received this complaint and registered a case in Virudhunagar V&AC Cr.No.7/2020 u/s 7 of the PC (Amendment) Act, 2018 was registered on 13.12.2020 at 2.30 hrs. First Information Report (Original) and complaint are submitted to the Hon'ble Chief Judicial Magistrate cum Spl. Judge for PC Act cases, Srivilliputhur and copies submitted to the concerned officers. (sd)S.Vimala, 13.12.2020, Inspector, V&AC, VNR.

13/12/2020.
(S.VIMALA)
Inspector
V&AC VNR.